Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.168 /2022 Date:27.03.2026
Deposition of witness for prosecution: PW8 ( LW13)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சிலைமணி | Village | இராமநாதபுரம் |
| Father/ Husband Name | கரும்பன் | Taluk | இராமநாதபுரம் |
| Age | 61/2026 | Calling | ஆய்வாளர்(ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.03.2026 TIME 03.55 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 27.09.2020–ம் தேதி கம்பம் வடக்கு காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது, கம்பம் வடக்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திவான்மைதீன் அவர்கள் பிச்சை மகன் உதயகுமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நிலைய குற்ற எண். 1015/2020 இதச பிரிவு 279, 337 ஆக வழக்கு பதிவு செய்து முதற்கட்ட விசாரணையில் சம்பவம் இடம் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்து, சாட்சிகள் தங்கபாண்டியன், ஜெயபிரகாஷ், பாலு, விஜய் ஆகியோர்களை விசாரணை செய்து பின்னர் வழக்கு கோப்பினை எனது பார்வைக்கு சமர்ப்பித்தார். பின்னர் வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 28.09.2020–ம் தேதி 00.30 மணிக்கு இவ்வழக்கில் காயம்பட்ட பிரசாந்த் என்பவர் சிகிச்சை பலனிற்றி தேனி க.விலக்கு அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின் படி வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இத,சவிலிருந்து 279, 337, 304 ஏ இதசவாக சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு தேனி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று 28.09.2020–ம் தேதி பிரேத விசாரணை சாட்சிகள் நல்லதம்பி, மணிகண்டன், அய்யப்பன், பிரபாகரன், ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் காலை 08.00 முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்பு பிரேதத்தை உடற்கூறாய்வு செய்வதற்காக வேண்டுகோள் கடிதம் 1036 காவலர் முத்துராஜா விடம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்பு வழக்கு சம்மந்தமாக சாட்சிகள் உதயகுமார், தங்கபாண்டி, ஜெயபிரகாஷ், பிரேம்குமார், பிச்சை, காவலர் முத்துராஜா ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் எதிரி நிலையத்தில் ஆஜரானவரை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். வழக்கில் சம்மந்தப்பட்ட TN 57 N 2367 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து மற்றும் 09.10.2020–ம் தேதி உதயகுமார் ஓட்டி வந்த TN 60 R 8903 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர

வாகனம் ஆகியவற்றை தனித்தனி வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் அருண்குமார் என்பவரையும் முதல் விசாணை செய்த சார்பு ஆய்வாளர் திவான்மைதீன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்தில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. சையது அபுதாகீர் அவர்களை விசாரணை செய்து சான்றிதழ் பெற்றேன். பின்னர் பிரேத பரிசோதனை மேற்கொண்டு மருத்துவர் திரு.கணபதி அவர்களை விசாரணை செய்து சான்றிதழ் பெற்றேன். மேலும் இவ்வழக்கில் விபத்துக்கு காரணமான வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விசாரணை செய்து சான்றிதழ் பெற்றேன். எதிரி மீது வழக்கு விசாரணை முடித்து 05.11.2020ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5**, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6, 7**, பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.8**, உடற்கூறாய்வு சான்றிதழ், **அ.சா.ஆ.9**, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.10** , உதயகுமார் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

சார்பு ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். சார்பு ஆய்வாளர் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகார்வாக்குமூலத்தில் கொடுக்கப்பட்ட இடம், தேதி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் பின்யோசனை செய்து தயாரிக்கப்பட்ட காரணத்தினால் தான் அதில் இடம் மற்றும் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. உதயகுமார், பிரசாந்த் ஆகியோர்களின் விபத்து பதிவேட்டில் மதுவின் தாக்கத்தில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 28.09.2020–ம் தேதி செய்த விசாரணையில் உதயகுமாரை மதுதாக்கத்தில் இருந்தது குறித்து தனிவழக்கு பதிவு செய்தேனா என்றால் இல்லை. விபத்தில் இறந்த பிரசாந்தின் விபத்து பதிவேட்டில் பிரேம்குமார் என்பவர் தான் மருத்துவமனையில் சேர்த்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரேம் குமார் தான் விபத்து நேரில் பார்த்த சாட்சியா என்றால் தகவல் தெரிந்து விபத்து நடந்த இடத்திற்கு வந்து காயம்பட்ட நபரை மருத்துவனையில் சேர்த்தாக எனது விசாரணையில் தெரியவந்தது. பிரேம்குமாரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) உதயகுமார் தான் விபத்து நடந்த போது இருசக்கர வாகனத்தை ஓட்டி வரவில்லை என்றால் சரிதான், பிரசாந்த் தான் ஓட்டி வந்தார். நான் தெளிவற்ற புலன் விசாரணை செய்தேன் என்றால் சரியல்ல. விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை 09.10.2020–ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் அவருக்கு ஆய்வுக்கு அனுப்பினேன். இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் அதன் ஓட்டுநர் உதயகுமார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம்

கம்பத்தில் உள்ள தமிழ்நாடு போக்குவரத்து கழக பணிமனையின் நுழைவு வாயில் அருகே என்றால் சரிதான், சாலையில். தார்சாலை மற்றும் மண்சாலையின் அகலங்கள் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் விபத்து ஏற்பட்டுயிருந்தால் இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து நடைபெற்றுருந்தால் பேருந்தின் முன்பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுயிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சாட்சி தங்கபாண்டியன் பிரசாந்த் என்பவர் தான் இருசக்கர வாகனத்தை பேருந்து மீது மோதியதாக சொல்லியுள்ளது சரியா? தவறா? என்றால் பேருந்து தான் பிரசாந்த் மீது மோதியதாக எனது விசாரணையில் சொன்னார். புகார்தாரர் எதிரியை எனக்கு அடையாளம் காட்டினாரா என்றால் தனது புகாரிலேயே எதிரியை பற்றி விசாரித்து தெரிந்துகொண்டதாக சொல்லியுள்ளார்.

**நீதிமன்ற கேள்வி** :- எதிரியை எவ்வாறு அடையாளம் கண்டுக்கொண்டீர்கள் ?

**பதில்:-** புகாரில் குறிப்பிட்டுள்ள படி எதிரி பணி செய்யும் அலுவலகத்தில் விசாரணை செய்த போது அவரை அடையாளம் காட்டி ஆஜர் படுத்தினார்கள்.

3) கண்ணுற்ற சாட்சிகளாக உதயகுமார், தங்கபாண்டி, ஜெயபிரகாஷ் எதிரியை நீதிமன்றத்தில் தான் தெரிந்து கொண்டார்கள் என சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபரான பிரசாந்த் தான் மதுவின் தாக்கத்தால் தனது இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக இயக்கி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.